தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன் கிழமை, 1982 மார்ச், 17.

பங்குனி 4, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே; ஆயினும் அவர்கள் செய்கின்ற செயல்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை வெளியிடுதல்.

* வினா எண் 517—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை வெளியிடும்படி இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் தபால் தலையை வெளியிட முயற்சிக்கின்ற இந்த வேளையில், தன்னுடைய பாட்டுத் திறத்தாலே வையத்தை பாலிக்க வந்த புரட்சிக் கவிஞர் பாரதியாரின் தபால் தலையை வெளியிடுவதற்கு இந்த அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது? என்ன பதில் மைய அரசிடமிருந்து கிடைத்திருக்கிறது? எப்போது அது வெளியிடப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாரதியாருடைய அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதுபற்றிய முடிவைக் கூற இருக்கிறார்கள். இன்னும் அதுபற்றிய விவரம் கிடைக்கவில்லை. அதே போல் பாரதிதாசன் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிடுவதற்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசு அதைப் பற்றிய பதிலை இன்னும் ஏதும் தெரிவிக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் உருவத் தபால் தலையை வெளியிட மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது வெளியிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒப்புக்கொண்டார்கள் என்று நான் சொல்லவில்லை; கடிதம் எழுதியிருக்கிறோம். பல தடவை அவர்களுக்கு நினைவூட்டி கடிதம் எழுதியிருக்கிறோம். 1-6-81 தேதி பாரதிதாசன் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்குப் பிறகு 10-7-81, 18-8-81, 30-9-81, 11-11-81, 15-12-81, 9-2-82 ஆகிய நாட்களில் மீண்டும் நினைவுக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராஜ சுவாமிகள் தபால் தலையை மத்திய அரசு வெளியிட விரும்பியபோது, இப்படி தபால் தலையை வெளியிடும்போது, அதிலே சீல் குத்தும்போது, அந்த முகத்தை பாதிப்பதாக உள்ளது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனவே, பாரதிதாசன் தலையை வெளியிடும்போது, முகத்தை பாதிக்காத அளவு ஒதுக்குப்புறமாக சீல் குத்துவதற்கு ஏற்பாடு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிட்ட பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம். இன்னும் வெளியிடவே இல்லை.

அரசு அலுவலகங்களுக்கு வாராந்திர விடுமுறை நாட்கள்.

* வினா எண் 518—திரு. ஏ. அங்குசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்கட்கு வாரம் இரண்டு நாட்கள் விடுமுறை விடும் திட்டம் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து நாட்கள் வேலை என்ற செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருந்து வந்தது.

(ஆ) மத்திய அரசு அலுவலகங்களில் இதே மாதிரியான செயற்குறிப்பினைக் கைவிட்டு விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே மாநில அரசும் இச்செயற்குறிப்பினை கைவிட்டு விட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசு அலுவலக நாட்கள் 5 நாட்களாகக் குறைக்கப்படுகின்றபோது, வேலை நேரம் கூட்டப்படுமா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?